**உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டம் (செயற்திட்டக் கூறு) - 2022**

---

உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் - (செயற்திட்டக் கூறு) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் என்பவற்றிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 17 ஆம் திகதிய 8743 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 6026 எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கை என்பவற்றின் 4.09(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அமைச்சு மற்றும் UGC ஆல் அங்கீகரிக்கப்பட்ட அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் என்பன அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன.

அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் முன்னுரிமைத் துறைகளில் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம்) மாணவர் உட்சேர்க்கையை அதிகரித்தல், பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உயர்கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,136 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் இது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மார்ச் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2017 யூலை 03 ஆம் திகதிய டிஎம்எஸ்/7777/ஏஎச்ஈஏ டி ஆம் இலக்க கடிதம் | தொழில்நுட்ப உதவியாளர்கள் AHEAD செயற்பாட்டு செயற்திட்ட அலுவலகம் - OMST இற்கு 2022 ஆம் ஆண்டில் அங்கீகாரம் இல்லாமல் பணிக்கமர்த்தப்பட்டதுடன் மீளாய்வாண்டில் ரூபா 13.6 மில்லியன் கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டது. | செயற்திட்டச் செயற்பாடுகள் சுமூகமாக அமுல்ப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு வெற்றிடங்கள் TA’s உடன் நிரப்பப்பட வேண்டியிருந்தது. கடன் உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இருக்கும் செயற்திட்ட செயற்பாட்டுக் கையேட்டில் TA’s இன் நியமனத்திற்காக ஏற்பாடுகள் உள்ளன. 2019 ஏப்ரல் 29 இல் நடைபெற்ற வழிநடாத்தல் குழுக் கூட்டம் TA’s இன் நியமனத்தை அங்கீகரித்துள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கு முரணான செயற்பாடுகளுக்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

### 2.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றின் பிரகாரம் OMST கட்டிடத்தின் வளாகத்தில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 26.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது, இதில் அலுவலக வாடகை ரூபா 21 மில்லியன், அலுவலக துப்பரவுக் கட்டணங்கள் ரூபா 1 மில்லியன் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் ரூபா 3.6 மில்லியன் உள்ளடங்குகின்றன. எனினும் 35 செயற்திட்ட பதவியணியினர் மாத்திரமே கட்டிடத்தில் பணிபுரிகின்றனர். | முன்னைய ஆண்டு கணக்காய்வு அவதானிப்பில் நாம் தெளிவுபடுத்தியவாறு அலுவலக வளாகம் போட்டி பெறுகை செயன்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டது. முன்னர் இந்த அலுவலக வளாகத்தை வாடகைக்கு எடுப்பதில் பல கட்டிடங்கள் கருத்தில் கொள்ளப்பட்டதுடன் இது மிகவும் சிக்கனமான வாடகை விகிதமாக இருந்தது. அலுவலக துப்புரவு சேவையும் போட்டி பெறுகை நடைமுறை மூலம் பெறப்பட்டது. OMST எப்போதும் மிகவும் சிக்கனமான முறையில் சேவைகளைப் பெறுகிறது. | செலவினம் சிக்கனமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |